


நல்லூர் - பூநகரியைப் பிறப்பிடமாகவும்,
முக்கொம்பன் - பூநகரியை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் கணபதிப்பிள்ளை முத்துக்குமார்

## (பொன்னுத்துரை)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# குமார தீபம்

06.07.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



நல்லூர் பூநகரியை பிறப்பிடமாகவும்,
முக்கொம்பன் பூநகரியை வசிப்பிடமாகவும்
கொண்ட

# அமரர்.கணபதிப்பிள்ளை முத்துக்குமார்
# (பொன்னுத்துரை)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# குமார தீபம்

## 06-07-2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின்
அரும் பொக்கிஷமாக திகழ்ந்து
எம்மை நல்லறிவாளராகவும்,
நல்லொழுக்க சீலராகவும் வளர்த்து
பேணிப் பாதுகாத்து வழிநடாத்தி,
எம் வாழ்வு சீரும் சிறப்புமாக இருக்க
அரும்பாடுபட்டு அயராது உழைத்து
இன்று வானுறையும் தெய்வமாகி
விட்ட எங்கள் குடும்பத் தலைவருக்கு
இம் மலரை அவர் பாதங்களில்
சமர்ப்பிக்கின்றோம்.

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்ச புராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையே வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணியின் பணிந்து.

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனதும் மருவி நின்றகலார்
மாணபினர் காண்பில வேடர்
நோயினும் பிணியும் தொழிலபார் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்மையை பெருக்கி பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்கு
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
அம்மையே உன்னைச் சிக்கனப் பிடித்தேன்
எக்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மணமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழற வுழறியுமை
மண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு
நாம் பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணில் 12.01.1941

விண்ணில் 06.06.2015

அமரர்

# திரு. கணபதிப்பிள்ளை முத்துக்குமார்

(பொன்னுத்துரை)

## திதிவெண்பா

தூய மன்மத வருடம் வைகாசியின்
மேய தேய்பிறை சங்கடசதுர்த்தி திதியதனில்
நல்லோர் போற்றும் கணபதிப்பிள்ளை முத்துக்குமார்
அடைந்தார் தப்பாமல் சிவன் கழல் சென்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

### திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்மடி யார்கள் வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க மன்னன்!
கோன்முறை அரசு செய்க! குறைவிலாதுயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்களோங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கொம்பன் கிராமத்தின் தந்தையும்
## ஆரம்ப கால வழிகாட்டியுமான
# அமரர் கணபதிப்பிள்ளை முத்துக்குமார்
அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

பூநகர் மண் புதுமைகள் பொங்கும் புது ஊர்
வயலோடு வயல் சார்ந்த மருத நிலமும்
கடலோடு கடல் சார்ந்த நெய்தல்
மணல் மேடுகளும் கற்பக தருக்களும்
சோலை வளங்கள் நிறைந்த அழகிய கிராமமாம்
பார் போற்றும் பல கல்விமான்களையும்
பக்தி பாமாலைகள் இசைத்திடும்
ஆலயங்களும்......
கொத்துக் கொத்தாய் நெல் மணிகள் விளைந்து
பூத்துக் குலுங்கும் நல்லூர் பதியில்
பிறப்பெடுத்து வாழ்ந்த காலம் யாவும் மண்ணோடும் மக்களோடும்
வாழ்ந்து ஊரார் வாழ்த்த ஊருக்கு பெருமை
சேர்த்து கடமைகள் யாவும் நிறைவேற்றி பலகத்தறை
முருகனின் பாதங்களில் சரணடைந்த முத்துக்குமரா
(பொன்னுத்துரையப்பா ஊராரின் செல்லப் பெயர்)
அவர்களின் வாழ்க்கை சுவடுகளை திரும்பிப் பார்போம்

காலைச் சூரியன் தன் பொன் வண்ணக் கதிர்களை பூமியெங்கும் பரப்பியவாறு வானம் என்னும் வீதியால் வரும் வேளை அவன் பொன் வண்ண கதிர்களை பட்டுத் தெறிக்கும் இடமெங்கும் பச்சை வயல்களும் பாய்ந்தோடும் ஆறுகளும் வானம் தொடும் அளவிற்கு பரந்து விரிந்த பசுஞ்சோலை வளங்களும் என பார்ப்பவர் கண்கள் மீண்டும் ஓர் முறை திரும்பிப் பார்க்க வைக்கும் பொன் நகர் துன்பம் என வருவோருக்கு துவண்டிடாமல் அருள் வழங்க பலகத்தறை முருகனும் ஊரெல்லாம் பரந்து வாழும் உறவுகள் அனைவரையும் பங்குனி வேள்வியில் சந்திக்க வைக்கும் மேளாய் கண்ணகை அம்மனும் அருள் வழங்க அவர்களின் ஆசியில் துன்பங்கள் ஏதுமின்றி மக்கள் மகிழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் நல்லூரில் கணபதிப்பிள்ளை சின்னத்தங்கம் என்பவர்களுக்கு அருந்தவப் புதல்வராக 12-01-1941 இல் திரு.க.முத்துக்குமார் அவதரித்தார். அன்புக்கு ஓர் அண்ணனாய் சுப்பையா என்பவரும், ஆசையாய் கொஞ்சி மகிழ தங்கை கண்ணகைப்பிள்ளையும் அவதரித்து இவ் மண்ணுலகில் தவன்று தத்தி நடை பயின்று தனது ஆரம்ப கல்வியை கிளி/பூநகரி/நல்லூர் அ.த.க பாடசாலையில் கற்றுக் கொண்டிருக்கும் பொழுது காலனவன் தன் கணக்கை மாற்றி எழுதினானோ என்னவோ அண்ணனையும், தாயாரையும் கவர்ந்து விட பள்ளிப் படிப்பை பாதியிலே நிறுத்தி குடும்ப பொறுப்பை தாங்கினார். வீட்டு வேலைகளிலும் பொது வேலைகளிலும் ஈடுபட்ட முத்துக்குமார் தன் கடமைகளில் ஒன்றாக 1959இல் பலகைகந்து விறுமர் ஆலயப் பூசகராக செயற்பட்டார்.

1965 இல் தனது 24 வது வயதில் நல்லூரில் வாழ்ந்த நாகரத்தினம் மாணிக்வல்லி என்பவர்களின் புதல்வி கற்பகத்தை தனது வாழ்க்கைத் துணைவியாய் கரம் பிடித்தார். இல்லறத்தின் இனிய செய்தியாய் நாகேஸ்வரி, நிர்மலா, நந்தினி, கமலினி, குகானந்தன், குமுதினி ஆகிய மகவுகளை பெற்றெடுத்து இல்லறம் என்னும் நல்லறத்தில் இனிமையாக வாழ்ந்தனர்.

தம் வாழ் நாளில் கூடுதலான காலத்தை பொதுப் பணிக்காக அர்ப்பணித்தார். முக்கொம்பன் கிராமத்தின் உருவாக்கத்திற்கு வழி காட்டியாக இருந்ததுடன் 1974ம் ஆண்டு முக்கொம்பன் கூட்டுறவுப் பண்ணைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது 25 பேரில் இவரும் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். விளை நிலங்களை பதப்படுத்துவதற்கு தன்னாலான சகல விதமான ஒத்துழைப்பையும் வழங்கி ஊர் வளமடைய உழைத்தவர்களில் இவரும் ஒருவர். இதன் பின்னர் 1989- 1994 வரை நல்லூர் முருகன் ஆலயத் தொண்டராகவும், பரிபாலன சபை பொருளாளராகவும் செயற்பட்டார். அத்துடன் வீட்டு நிலம் எடுத்தல், பஞ்சாங்கம் பார்த்தல் என பல நற்காரியங்களிலும் ஈடுபட்ட இவர் பொது வேலைகள் மட்டுமன்றி தனது தந்தைக்குரிய கடமைகளையும் நிறைவேற்ற தவறவில்லை. பிள்ளைகளையும் படிக்க வைத்து பண்பானவர்களாகவும், பக்தியாளர்களாகவும், அனைவருடனும் அன்பாகவும், பணிவானவர்களகாவும் வளர்த்தெடுத்து அவரவர்களுக்கு ஏற்றவாறு வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்து அவர்களையும் ஓர் குடும்பம் எனும் கூட்டுக்குள் இணைத்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் இனிமையான இல்லறத்தில் முதல் முத்தாய் நதிகா எனும் அழகுப் பேர்த்தியை கண்டு அக மகிழ்ந்தார். அத்துடன் அவர் மகிழ்ச்சிக்கு முற்றுப் புள்ளி ஆண்டவன் வைக்கவில்லை. தொடர்ச்சியாய் அழகுக் குட்டிகளாய் பேரன்களையும் பேர்த்திகளையும் கண்டு மகிழ்ந்தார்.

சாந்தமே உருவான இவர் முகத்தில் என்றும் திருநீற்க் குறிக்கும் சந்தனப் பொட்டிற்கும் பஞ்சமிருக்காது. பொன்னுத் துரையப்பா என செல்லமாக அழைக்கும் ஊரவர்களிற்கும் தன் உறவுகளிற்கும் என்றுமே இவர் தந்தையாக இருப்பார். தன் குழந்தைகளை மட்டுமன்றி தன் மனைவியின் சகோதரர்களின் குழந்தைகள் மீதும் அளவு கடந்த ஆன்பு கொண்டவர். அவர்களின் நன்மை தீமைகள் யாவிலும் முன் நிற்பவர். ஐயா ஐயா என தன்னையே சுற்றி சுற்றி வரும் குழந்தைகளிற்கு கல்வியையும், நற் பழக்க வழக்கங்களையும், கடவுள் பக்தியையும் பற்றி கற்றுக் கொடுப்பார். தன் பெறாமக்கள் அனைவருக்கும் பெரிய தந்தையாக உடனிருந்து கடமைகள் யாவையும் நிறைவேற்றிய பொழுதுகளை பார்க்கும் போது ஊரவர்களே பார்த்து வியந்து நிற்பர். இவ்வாறாக நல்லூரில் வாழ்ந்து ஆலயத்தின் தன் கடமைகளை செய்து பின்னர் முக்கொம்பன் கிராமத்தில் வசிப்பதற்கு சென்றார்கள்.

முக்கொம்பன் கிராமத்தில் காளி கோவில் சென்று வணங்கி வந்தார். ஆலயமும் வீடும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள் என தன் வாழ்க்கை நடாத்தி சென்றவரின் வாழ்வில் சோகங்களும் இல்லாமலில்லை. 2006 காலப் பகுதியில் வன்னி மண்ணில் நடந்த போரில் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்ட வேளை தன் குடும்பத்தையும், உறவுகளின் குடும்பத்தையும் தன் குடும்பம் போல் தாங்கினார். எவள் முதல் முத்து என அள்ளி கொஞ்சிய நதிகா குட்டி உயிர் பிரிந்த செய்தி அவரை இடியாக தாக்கியது. தூக்கி கொஞ்சிய பேர்த்தியின் பிரிவின் கண்ணீர் வற்றும் முன்னரே கை பிடித்து நடை பழக்கி அவன் தந்தையைப் போல் அன்பை அளித்து பெற்ற மகனைப் போல் தாக்கி வளர்த்த பெறாமகன் யதுர்ஷனின் பிரிவும் அவரை மாறாத சோகத்திற்கு கொண்டு சென்றது. சாந்தமே உருவான அவர் முகம் பிஞ்சுகள் இரண்டின் இழப்பாலும் இடப் பெயர்வின் களைப்பாலும் சிறுக சிறுக சேர்த்த சொத்துக்களின் அழிவாலும் ஏற்கனவே ஆஸ்மா நோயினால் பாதிக்கப்பட்ட அவருடல் தொடர் இழப்புக்களின் வலியால் துவண்டு போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளோடு உறவுகளாய் அனைதடதையும் இழந்து நடைப் பிணமாய் நலன்புரி முகாமில் தஞ்சமடைந்தனர். உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிக்கப்பட்ட போது மனைவியின் அரவணைப்பாலும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளின் அன்பாலும் ஆண்டவனின் அனுக் கிரகம் எப்போதும் அவருடன் இருப்பதாலும் சோர்ந்து விடவில்லை. பாசத்தைக் காட்டும் ஏனைய தன் உறவுகளிற்காய் தன்னால் இயன்ற வேலைகளைச் செய்து வந்த போதும் நிலமை சாதகமாக அமைய மீண்டும் தன் ஊருக்கு வந்து வாழ்ந்த போதிலும் 10 வருடங்களிற்கு மேலாக தன் மகனையும், மகள் நந்தினியையும் காணாத ஏக்கம் இருந்ததை அறிந்து தன் குழந்தைகளை தந்தை தாய்க்கு காட்டுவதற்காய் புலம் பெயர் தேசத்திலிருந்து வந்த மகள், மருமகன், பேரப்பிள்ளைகளோடு கதைத்து ஆனந்தம் அடைந்தார்.

இவ்வாறாக இன்பமும் துன்பமும் அவரது வாழ்க்கையில் மாறி மாறி வந்து போனாலும் தன் கடமையில் இருந்து என்றும் மாறியதே இல்லை. உற்றவர்க்கும் ஊரவர்க்கும் ஒரு நற் பண்பாளனாய் முன்னுதாரணமாய் திகழ்ந்தார். தன் ஒரே ஒரு மகனை இறுதி வரை சந்திக்காமல் அந்த ஏக்கத்துடனேயே காலன் அவன் வகித்த கணக்கிற்கு அமைய 06-06-2015 அன்று தன் உறவுகள் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தி விட்டு முருகப் பெருமானின் பாதார விந்தங்களில் சரணடைந்தார்.

"பிறப்புண்டேல் இறப்பு உண்டு" இது உயிர்களிற்கு இறைவன் வகுத்த விதி. இந்த வாக்கிற்கு இணங்க இறைவனடி சேர்ந்த முத்துக்குமாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

- குடும்பத்தினர் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

மணம் புரிந்த நாள் முதல்
குறையேதும் வைக்காது
வளமான வாழ்வு தந்து
உலகோர் போற்ற வாழ வைத்தீர்
போன வழி யாதோ ஐயா
தழராத சோகம் தீர்க்க
எதைச் செய்வேன் நான்
பார்க்கும் இடமெல்லாம் உங்கள் முகம் தான்
காண்கின்றேன் - நான் வாழும் காலம் யாவும்
உங்கள் வழி காட்டலில் வாழ்ந்திடுவேன்
கதிரவன் தோன்றும் நேரம் கண்மூடிய - என்
கணவனே உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றென்றும் ஆண்டவனிடம் பிரார்த்திப்பேன்.

*பிரிவால் வாடும்*
*துணைவி*
*கற்பகம்*

## தங்கையின் துயர் பகிர்வு

கண்ணால் நீர் வழிய
இரு கரத்தால் சிரம் நோக
அண்ணா .... அண்ணா.... என அழைத்து
எந் நாளும் அழைக்கின்றேன் - நீ
சென்றாய் எனும் நாள் தொட்டு - விறுமரை
மன்றாடி வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிய தோர் பிறவி உண்டு
உரிய தோர் பெயர் - முத்துக்குமார்
சீரிய பார்வை கண்ணில்
காரியம் எது வென்றாலும்
ஜோதிடம் பார்த்து நின்றிடுவாய்
நீதிக்காய் நின்று வென்றிடுவாய்

பால் மணம் மாறா பச்சிளம் பருவமாய் - இருவரையும்
பாதியில் விட்டு விடை பெற்றாள் எம் அன்னை - அன்று
அம்மா மடிச்சுகமிழந்திருக்க எனக்கு
அன்பாய் பேசி அமுதூட்டி
கண்ணை இமை காப்பது போல்
அன்னையாய் நின்றாய்

நல்லறம் புகட்டி இல்லறம் காட்டி - நான்
நன்றாய் வாழ்ந்திட அண்ணா நீ
என்றுமே உதவினாய்
ஒன்றுமே சொல்லாமலிருக்க - காலன்
இன்று வா என அழைத்தானோ?
தங்கைச்சி .... தங்கைச்சி .... என்பாய்
தவிக்கிறேன் அக் குரல் கேட்க

அண்ணா உன் ஆத்மா சாந்தியடைய - எம்
குல தெய்வங்களை வேண்டி நிற்பேன்
மன்றாடி வேண்டி நிற்பேன் - தினமும்
மலர் கொண்டு பூசிப்பேன்.

*பிரிவால் வாடும் அன்புத் தங்கை*
*கண்ணகைப் பிள்ளை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் புலம்பல்

அன்பான அப்பாவே..!
அன்புக்கும் பண்புக்கும் அரவணைப்புக்கும் உங்கள்
உள்ளமொன்றே போதும் அப்பா
அப்பா என்று அழைத்த நாட்களை விட நாம்
ஐயா என அழைத்த நாட்களே அதிகம்
பண்பாக வளர்த்து வையத்தள் வாழ வைத்தீரே
உள் மனம் சொல்லவில்லை எங்கள் ஐயா
எங்களை விட்டு நீங்குவாரென
நித்தம் உங்கள் குரல் கேட்காமல்
தூங்க மாட்டோமே இனியார் குரல்
நாம் கேட்பது எங்கள் ஐயாவே
உங்களோடு வாழ்ந்த காலத்தில் மற்றவர்களுடன்
நீங்கள் பழகிய முறை பற்றி பிறர்
கூறிக் கேட்கும் போது எம் மனம்
இன்னும் வேதனையடைகிறது ஐயா
அன்பால் அரவணைத்து அறிவுரை சொல்ல எங்களோடு
பாச மழை பொழிவீரே ஐயா
எமக்கு எந்தக் குறையும் வைக்காது
இறையடி சென்றீர்களே
உங்கள் அன்புக்காய் ஏங்கித் துடிக்கின்றோம்
ஆறாத்துயரில் எங்களை விட்டு எங்கு
சென்றீர்கள் ஐயா உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம் ஐயா



*பிரிவின் துயரில்*
*பிள்ளைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகள் நந்தினியின் புலம்பல்

தொலை தூரம் நானிருந்து துடிக்கிறேன் ஐயா
இறுதியில் உங்கள் வதனம் காணவில்லையே
பேரப்பிள்ளைகள் முகம் காண வேண்டுமென
நீங்கள் துடித்த துடிப்பு நானறிவேன் ஐயா
உங்கள் ஆசையை அன்று நிறைவேற்றியதால்
மனம் சற்று ஆறுதல் அடைந்தாலும்
இறுதியாய் ஓர் தடவை உங்கள் முகம் காணாத
துயரம் என்னை வாட்டுகிறதே
உயிர் போகும் தருணத்தில் என்னை
எத்தனை தடவை நினைத்து
கண் கலங்கியிருப்பீர்கள் என் செய்வேன் ஐயா
உங்களுக்கு இறுதிக் கிரியைகள் செய்வதற்கு
பாவியிவளுக்கு கொடுத்த வைக்கவில்லை
அம்மாவின் மடி சாய்ந்து அழுதிட
மனம் துடிக்குது ஐயா
கதறி அழும் உங்கள் குழந்தைக்கு
ஆறுதல் கூற ஓர் தடவை வந்திடுங்கள் ஐயா

*பிரிவின் துயருறும்*
*அன்பு மகள்*
*நந்தினி (லண்டன்)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் குகனின் புலம்பல்

எத்தனை வருடங்கள் இருட்டில் இருந்தேன் ஐயா
12 வருடங்கள் உங்கள் பூவதனம் காணவில்லை
ஓர் தடவை உங்கள் முகம் பார்த்திட ஏங்கிய
நாட்கள் தான் எத்தனை ஐயா
உறவுகளை தொலைத்து உணர்வுகளை அடக்கி
புலம் பெயர் தேசத்தில் வாழ்ந்திடும் ஒவ்வொரு
நொடியிலும் கண்ணிற்குள் வந்து சொல்லுமையா
உங்கள் புன்னகை வதனம்
காலம் ஓர் நாள் கைகூடி உங்களை காண வருவேன்
என்ற என் கனவு கடைசி வரை பலிக்கவில்லை
ஒற்றை ஆண் மகனை பெற்றதற்கு எந்தன்
கை மாறாய் கொள்ளிக் குடம் தான்
உடைத்தேன் ஐயா......
தேம்பி தேம்பி அழுகின்றேன்
தேற்றுவார் இன்றி
மீண்டும் ஓர் பிறப்புண்டேல் என் மகனாய்
பிறந்திடுங்கள் உங்களுக்காய் செய்ய வேண்டியது
நிறைய உள்ளது ஐயா....!



*பிரிவால் வாடும்*
*அன்பு மகன்*
*குகானந்தன் (பிரான்ஸ்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரக்குழந்தைகள் புலம்பல்

அரவணைத்து உணவளித்த அன்புக் கரங்களெங்கே
ஐயா என அழைக்கும் முன்னே ஓடிவரும்
உங்கள் கால்கள் எங்கே...?
நிம்மதியிழந்து நித்தம் தவிக்கின்றோம் ஐயா
மீண்டும் ஓர் முறை வந்திட மாட்டீர்களா?
உங்கள் குறும்புக் கதைகள் கேட்டிட மனம் ஏங்குதையா
காலையும் மாலையும் நெற்றியில் திருநீறு பூசிடும்
பழக்கம் கற்பித்து தந்த உங்கள் அறிவுரைகள்
நித்தம் நித்தம் நம் மனதில் நிழலாடுதையா
தீராத சோகத்தை நமக்கு பரிசாய் தந்து விட்டு
சென்று விட்டீர்கள் காலனிடம்
ஆறுதலின்றி அழுகின்றோம் ஐயா
வருடங்கள் பல கழிந்து போனாலும்
பக்குவமான உங்கள்
நெறிப்படுத்தலில் வளர்ந்தோம் நாம் உங்களின்
வழிகாட்டலில் என்றும் நாம் பண்பானவர்களாய்
வளர்வோம் ஐயா
மீண்டும் உங்கள் பாசம் கிடைக்காதா என ஏங்குகின்றோம்
உங்கள் செல்ல பேரக்குழந்தைகள் ஐயா

*பிரிவின் துயரில்*
*அன்புப் பேரப்பிள்ளைகள்*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

கண்ணீர் சிந்தி கலங்கித் தவிக்கின்றோம்
காவல்த் தெய்வங்களை வேண்டி நிற்கின்றோம்
குலத்திலகம் எங்கள் பெரிய மாமா - எமனின்
தலத்திற்கா சென்றீர்கள்
புலத்திலே இருந்து துடிக்கின்றோம் - எம்
நிலத்திலே உங்களை பார்க்கத் தவிக்கின்றோம்

புன்னகைச் சிரிப்போடு முகம் காட்டிய மாமா
புது புது கதை சொல்லி - எம்
சிந்தைக்கு மகிழ்வூட்டி தினமும் எம்மை
சிரிக்க வைப்பீர்கள்

வெள்ளை வேட்டி பச்சை நிறச் சால்வை
பசுமையான நடை வீச்சு ஒரு கை
அதற்குள்ளே உங்கள் வீரத்தின் மூச்சு
மறுகையில் செம்பு உள்ளே மலருடன் வருவீர்கள்
விறுமரையுட் காளித் தாயையும் தினமும்
மலரால் பூசிப்பீர்கள்

மெலிந்த மேனி மாமா உங்கள் உள்ளே
வலிமையான உள்ளம் - உதடுகள்
குவிந்த சிரிப்பு -அதில்
குழந்தையும் தோற்றிடும் அசட்டை
கூறிடும் வார்த்தையில் மழலை - நீங்கள்
ஆற்றிய வார்த்தையில் ஆறுதல் அடைவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சொல் ஒவ்வொன்றிற்கும் - பல
பொருளிருக்கும் நாம் நினைக்கின்றோம் - நாவில்
முருகனின் அருளிருக்கும் உங்களிற்கு மாமா
உங்கள் தந்தை கண்டது இரு முத்து - அதில்
நீங்கள் முதல் முத்து மாமா
சிந்தைதயால் ஊரார் உற்றுப் பார்க்கையில் - உங்கள்
பெயர் முத்துக்கள் இருக்கும் பொன்னத்துரை ஆகிற்று மாமா

**ஔவையார்.............**

"அட்டமுடன் என் தலையில் இன்பைடி என்றெழுதி
விட்ட சிவனுத் செத்து விட்டானோ முட்ட முட்டப்
பஞ்சமேயானாலும் பாரம் அவனுக்கனனாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ"

இக் கூற்றுக்கமைய உங்கள் ஆத்மா சாந்தி அடைய நாமும் இறைவனை வேண்டுகின்றோம்.

## பெறா மக்கள் புலம்பல்

எங்கள் குடும்பத்தின் குல விளக்கு
தத்தி தத்தி நடை பழகியதும் உங்கள் விரல்
பிடித்து தானையா....
தந்தைக்கு தந்தையாய் உடனிருந்து
எமை வளர்த்தீர்கள்
தாயின் அரவணைப்பில் நாம் வளர்ந்ததை விட
உங்கள் மடியில் தவழ்ந்த நாட்கள் தானே ஐயா அதிகம்
எங்கள் அனைவரையும் உங்கள்
குழந்தைகளாய் அணைத்தீர்கள்
அரவணைப்பையும் அன்பையும் வாரி வழங்கிய
உங்கள் கைகள் இடைக்கிடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிப்பையும் காட்டியதால் தான் - இன்று நாம்
ஊரவர்கள் பாராட்டும் அளவிற்கு
வளர்ந்துள்ளோம் என்றால் மிகையாகாது
ஐயா ஐயா என இனி நாம் யாரை அழைப்பது
எங்களிற்கு இனி நல்வழி காட்டுவது யாரையா
தாயை இழந்த சேய்களாய் தவித்து நிற்கின்றொம்
உங்களை இழந்து என்ன செய்வோம் ஐயா
உங்களின் இழப்பை இங்கு ஈடுகட்ட யாருமில்லை

*பிரிவால் துயருறும்*
*பெறாமக்கள்*

**வெற்றியின் ரகசியம்**

| | | |
|---|---|---|
| *அன்பு காட்டு* | - | *ஆனால் அடிமையாகி விடாதே* |
| *இரக்கம் காட்டு* | - | *ஆனால் ஏமாந்து விடாதே* |
| *பணிவாய் இரு* | - | *ஆனால் கோழையாய் இராதே* |
| *கண்டிப்பாய் இரு* | - | *ஆனால் கோபப்படாதே* |
| *சிக்கனமாய் இரு* | - | *ஆனால் கஞ்சனாய் இராதே* |
| *வீரனாய் இரு* | - | *ஆனால் போக்கிரியாய் இராதே* |
| *சுறுசுறுப்பாய் இரு* | - | *ஆனால் பதட்டப்படாதே* |
| *தர்மம் செய்* | - | *ஆனால் ஆண்டியாகி விடதே* |
| *பொருளைத் தேடு* | - | *ஆனால் கடவுளை மறந்து விடாதே* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகன் துணை

# கந்த சஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்லினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மைய நடனஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில்வேலால் எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்றி
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுகதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர வணப வருக வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் திகம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்கு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ சணமும் பதக்கமுந் தரித்து
நண்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுடிகு டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பரவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாபிக கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியம்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டெரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனை வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒரு வழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்த குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதூ தாரெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பனைகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டதுவோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப்பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன்நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திடவருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலம் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவார்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்ல தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வார்க் குவந்தமு தளித்த
குருபரன் பழிநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி போற்றி
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் மனிதனாய் வாழ......!

- நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள் (Ego)
- சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள். (Tolerance)
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப் படாதீர்கள். ( Superiority Complex)
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று கடைசி வரை வாதாடாதீர்கள். (Adament Arguement)
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibility)
- மற்றவர் கருத்துக்களை செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். (Mis Understanding)
- அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள். (Over Expectation)
- குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள். (Narrow Mindness)
- அர்த்தம் இல்லாமலும் தேவை இல்லாமலும் பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டிருப்பதை விட்டு விடுங்கள். (Loose Talks)
- மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும் இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
- உண்மை எது பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் விட்டுப் பேசுங்கள்
- எப்போதும் எல்லோரிடத்திலும் அன்பு காட்டுங்கள்
- பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களோ பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள். அற்ப விஷயங்களை பெரிது படுத்தாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**கணபதிப்பிள்ளை + சின்னத்தங்கம்**

- சுப்பையா
- **முத்துக்குமார்**
- கண்ணகைப்பிள்ளை

**நாக**

- கதிரவேலு
- க

---

- நாகேஸ்வரி + மனோகரன்
  - நதிகா
  - கஜமுகன்
  - லக்ஷிகா *(பிரான்ஸ்)*
  - லக்ஷனா
  - தமிழ்செல்வி
- நிர்மலா + ஜெகதீஸ்வரன்
  - கௌதீசன்
  - தாட்சாயினி
  - அனோஜன்
  - இசைநங்கை
  - சிவநதினி
- நந்தினி *(லண்டன்)* + திருச்செல்வம் *(லண்டன்)*
  - டிதர்சன் *(லண்டன்)*
  - சகீனா *(லண்டன்)*
- கமலினி + ரவீந்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்சாவழி

🪔 நாகரத்தினம் + மாணிக்கவல்லி 🪔

**கதிரவேலு** **கற்பகம்** **கணபதிப்பிள்ளை** **சிதம்பரம்** **சிவயோகலட்சுமி**

நந்தினி ***(லண்டன்)*** + திருச்செல்வம் ***(லண்டன்)***
- டிதர்சன் ***(லண்டன்)***
- சகீனா ***(லண்டன்)***

கமலினி + ரவீந்திரன்

குகானந்தன் ***(பிரான்ஸ்)*** + கிருபாலினி ***(பிரான்ஸ்)***
- குகானி ***(பிரான்ஸ்)***

குமுதினி + அருள்சீலன்

🪔 - அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதை எடுத்துக்கொள்

1. மலையளவு உபசாரம் செய்தாலும் கடுகளவு அபகாரம் செய்யாதே.
2. தீயோனுக்கு நல்லவனாக இருந்தாலும் இரு நல்லோருக்கு மட்டும் தீயோராக இராதே.
3. இரண்டு சுயநலவாதிகளுக்கு மத்தியில் ஒரு பொது நலவாதி முட்டாளாகி விடுகிறான்.
4. அறிவாளி ஒருவன் கெட்டதையும் ஏற்று சிந்திக்கக் தொடங்குகிறான்.
5. பார்த்தவுடன் புரிந்து கொள்பவன் ஞானி பழகாமல் புரிந்து கொள்பவன் அறிவாளி பழகிப் புரிந்து கொள்பவன் ஏமாளி
6. உன்னை விட மேலானது எல்லா வகையிலும் உண்டு என்பதை மறக்காதே. நானே எல்லாவற்றிலும் உயர்ந்தவன் என்பதை மறந்து விடு.
7. ஏற்காதவனுக்கு அறிவுரை வழங்காதே அது உனக்கே ஆபத்தைக் கொண்டு வரும்.
8. பல வழிகளிலும் வருமானத்தைத் தேடும் ஒருவனால் தான் அநேகர் ஏமாற்றப்பட்டிருப்பார்கள்.
9. ஓட்டைப் படகும் ஒடிந்த துடுப்பும் இருந்தால் கரை சேரலாம் கடல் போல் நம்பிக்கை இருந்தால்.
10. முட்கள் குற்றாமல் பறித்த ரோஜா அவனுக்குரியதல்ல.
11. சாதிக்காதவர்களை சாதனையாளர்கள் ஒரு நாளும் மன்னிப்பதில்லை.
12. வெற்றிக்கும் தோல்விக்கும் சிறிய வித்தியாசம் தான் அது முயற்சி.
13. உன் முயற்சியை கை விடாத வரைக்கும் நீ தோல்வியடைவதில்லை.
14. உலகத்தை நீ வெல்ல வேண்டுமானால் முதலில் உன்னை நீ வெல்ல வேண்டும்.
15. சோர்வுகளை செலவு செய் நம்பிக்கையை சேமித்து வை முயற்சிகளை பெருகச் செய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நன்றி நவிலல்



எங்கள் அனைவரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட எங்கள் குடும்ப விளக்கு
**திரு. கணபதிப்பிள்ளை முத்துக்குமார்** அவர்களின்
இயற்கை எய்திய செய்தி அறிந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும்,
தொலைபேசி ஊடாக அனுதாபச் செய்திகளை பகிர்ந்து கொண்டவர்களுக்கும்,
இறுதிச் சடங்கின் போது கலந்து கொண்ட எம் பூநகரி வாழ் மக்கள்
மற்றும் ஏனைய இடங்களில் இருந்து வருகை தந்தவர்கட்கும்,
அரச, அரச சார்பற்ற ஊழியர்களுக்கும், சமூகத் தொண்டர்களுக்கும்,
பரிபாலன சபையினருக்கும், பாடசாலை மாணவர்களுக்கும்,
கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்ட அன்பு நெஞ்சங்களுக்கும்
நன்றிகளைத் தெரிவிப்பதோடு, எமது குடும்ப விளக்கின் துயரில் பங்கு
கொண்டு சகல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவருக்கும் அத்துடன் இம் மலரினை அழகுற அச்சிட்டு
வடிவமைத்த "பராசக்தி" பதிப்பகத்தினருக்கும் எமது
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**முக்கொம்பன்,**
**பூநகரி.**




**நன்றியுடன்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org